DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 109/2021

Deposition of Witness : DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜாகிருஷ்ணன் | Father's/Husband's Name : | பழனிச்சாமி |
| Village | : கன்னியப்பபிள்ளைபட்டி | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்என்றால் சொத்தில் பாகம் கேட்டு வழக் குதாக்கல் செய்துள்ளார். எத்தனை லக்க சொத்திற்காக வழக்கு தாகக்ல் செய்துள்ளார் என்றால் 2 லக்க சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1 வது லக்க சொத்தின் சர்வே எண்.187/2, விஸ்தீரணம் 96 செண்ட். 2 வது லக்க சொத்தின்ந சர்வே எண்.187/3, விஸ்தீரணம் 61 1/2 செண்ட். 1 வது லக்க சொத்து உண்ணாமலையம்மாளுக்கும், 2 வது லக்க சொத்து கோபால் கவுண்டருக்கும் பாத்தியப்பட்டிருந்தது. கோபால் கவுண்டர்– உண்ணாமலையம்மாள் கணவன் மனைவி என்றால் சரிதான். மேற்படியார்களுக்கு தனுஷ்கொடி, பழனிச்சாமி, நடராஜ் ஆகியோர் வாரிசுகள். அதில் பழனிச்சாமி எனது தந்தை. எனது அப்பாவிற்கு என்னோடு சேர்த்து 2 ஆண் மக்கள், 4 பெண் மக்கள் உள்ளனர். அவர்களின் பெயர்கள் தங்கவேல், வேலுத்தாய், சின்னவேலுத்தாய், ராமுத்தாய், போதுமணி, நான்.

2) கடந்த 1982 ம் வருடம் தாவா 1 வது லக்க சொத்தை எனது பாட்டி உண்ணமலையம்மாள் ராமசாமி கவுண்டர் என்பவருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். எனது பாட்டி இறந்த பிறகு 1988 ம் ஆண்டு அதே சொத்தை எனது தந்தை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். 1982 ல் ராமசாமி கவுண்டருக்கு பெயரளவில் கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை எனக்கு திருமணம் முடியும் வரை நானும் எனது சகோதரர்களும் கூட்டாக தான் அனுபவம் செய்தோம் என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து தற்போது வரை நாங்கள் பாகவிஸ்தி ஏற்படுத்தி கொள்ளவில்லை என்றால் சரிதான். தாவா 2 வது லக்க சொத்து இதுவரை

எனது தாத்தா கோபால் கவுண்டர் பெயரில் இருக்கிறது என்றால் சரிதான். தாவா 2 வது லக்க சொத்தில் வாதிக்கு பாகம் கொடுப்பதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.

3) தாவா சொத்தில் தனது பாகத்தை பிரித்து தரக்கோரி வாதி என்னிடமும் என் தந்தையிடமும் கேட்டார் என்றால் சரிதான். எப்போது கேட்டார் என்றால் எனது அப்பா கொடுக்கமாட்டேன் என்று சொன்னதால் வழக்கு தாக்கல் செய்துள்ளார். 2016–2017 வருடத்தில் வாதி எங்களிடம் பாகம் கேட்டார் என்றால் சரிதான். அதன் பிறகு 20.01.2017 ம் தேதி தாவா 1 வது லக்க சொத்தை 1 ம் பிரதிவாதி எனக்கு தானம் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அதன்பிறகு வாதி என்னிடம் தாவா சொத்தில் தனக்கும் பாகம் இருக்கிறது என்றும் அதை பிரித்து தரக் கோரி கேட்டார் என்றால் சரியல்ல. வாதி பாகம் கேட்ட பிறகு பிரச்சனை ஏற்பட்டதால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் என் மீதும் என் அப்பா மீதும் வாதி புகார் கொடுத்தார். அந்த புகாரின் பேரில் நானும் எனது அப்பாவும் காவல் நிலையத்தில் விசாரணைக்காக ஆஜர் ஆனோம். உரிமையியல் சம்பந்தமான பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தில் பரிகாரம் கோரும்படி அறிவுறுத்தி அனுப்பினார்கள்.

4) அதன் பிறகு தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல, வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் புகார் கொடுத்தார். தாவா 1 வது லக்க சொத்து எனது அப்பாவிற்கு தனித்து பாத்தியப்பட்டது இல்லை என்றாலும் வாதிக்கு பாகம் கொடுக்கக் கூடாது என்பதற்காக 1 ம் பிரதிவாதி எனக்கு தானம் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது அப்பா தாவா சொத்தை எனக்கு தானம் கொடுத்ததற்கு நான் என்ன மறுபயன் கொடுத்தேன் என்றால் ரூ.6,00,000/– பணம் கொடுத்தேன், எனது அப்பாவை நான் தான் பார்த்துக்கொள்கிறேன். எனக்கு எழுதி கொடுத்த தான பத்திரத்தில் ரூ.6,00,000/– கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதிக்கு என் மீது இருக்கும் அன்பினால் எழுதி கொடுத்ததாக தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான்.

5) எனது தந்தை அவரது பாகத்தை தான் எழுதி கொடுக்க முடியும் என்றாலும் மற்ற பாகஸ்தர்களின் பாகத்தையும் சேர்த்து அவர் எனக்கு எழுதி கொடுத்துள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் வாதியை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு எவ்வளவு கடன் இருந்தது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை.

தாவா சொத்துக்களில் வாதிக்கு 7 ல் 1 பாகம் இருக்கிறது என்றாலும் அதை மறைத்து இந்த வழக்கில் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியபடி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 16.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.03.16 06:09:10 +0530

District Munsif,
Aundipatti.